**சுருக்கம்**

கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சி எல்லைக்குள் உள்ள 8 பொதுப்பணித்துறை குளங்கள் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின்கீழ் ஒரு முறை செயலாக்கம் (One time Operation) மூலம் மேம்படுத்த மாநகராட்சி வசம் நீண்டகால குத்தகை அடிப்படையில் ஒப்படைத்தல் – அனுமதி – ஆணை – வெளியிடப்படுகிறது.

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை**

**அரசு ஆணை (நிலை) எண்.257 நாள் : 29.12.2009**

**படிக்கப்பட்டது:**

1) அரசாணை (ப) எண்.240, பொதுப்பணி(க்யூ1) துறை, நாள் 22.05.2008.
2) ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களின் கடிதம் ROC.எண்.13090/2006/ஜே.என்.3, நாள் 17.01.2009.
3) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ROC.எண்.8103/07/ஜே.என்.என்.1 நாள் 18.04.2009.
4) ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களின் கடிதம் ROC.எண்.13090/2006/ஜே.என்.5, நாள் 12.11.2009.
5) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ROC.எண்.8103/07/ஜே.என்.என்.1 நாள் 18.11. 2009.

------

**ஆணை:**

மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் உள்ள பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள 8 குளங்களையும் சில நிபந்தனைகளுக்குட்பட்டு ஒரு முறை செயலாக்கம் (one time operation) மூலம் மேம்படுத்த கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

2. இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது 18.04.2009–ஆம் நாளிட்ட கடிதத்தில் அரசு ஆணை(ப) எண்.240 பொதுப்பணித்துறை (க்யு1) நாள் 22.05.2008–ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் உள்ள பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள 8 குளங்களையும் மேம்படுத்தும் பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அரசால் அறிவுறுத்தப்பட்டதிற்கிணங்க கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றத்தில் 18.12.2008–ல் இது குறித்த பொருள் வைக்கப்பட்டதாகவும் கோயம்புத்தூர் மாநகராட்சி தீர்மான எண்.310, நாள். 24.12.2008ல் பின்வருமாறு நிறைவேற்றப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார் :–

(அ)பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான 8 குளங்களில் குமாரசாமி/முத்தண்ணன் குளம் நீங்கலாக மீதமுள்ள 7 குளங்களை மேம்படுத்தவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகையில் 30% தொகையினை மாநகராட்சி ஏற்கும்.

(ஆ) பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள குளங்களை புனரமைத்து சீரமைக்கும் பணிக்கு மாநகராட்சியில் 30% சதவீதத் தொகை செலுத்தி பங்கீட்டுப்பணி மேற்கொள்ளப்பட உள்ளதால், பொதுப்பணித்துறை வசம் உள்ள மேற்படி குளங்களை நீண்டகால குத்தகை அடிப்படையில் மாநகராட்சி பெற்று, வருவாய் தரக்கூடிய வகையில் மாநகராட்சி மூலம் திட்டங்களை செயல்படுத்தி, அதனால் வரும் வருவாயினை மாநகராட்சி பெற அரசின் உத்திரவு பெறப்பட வேண்டும்.

(இ) குமாரசாமி/முத்தண்ணன் குளம் பகுதியில் நீண்டகாலமாக வசித்து வரும் பொதுமக்கள் அவ்விடத்தில் இருந்து வெளியேற விருப்பம் தெரிவிக்காததால், இக்குளத்தினில் நீர் பகுதி பாதிக்காத வண்ணம் குடியிருப்புகளை கணக்கிட்டு, குடியிருப்புப் பகுதி நீங்கலாக குளத்தினை சீரமைத்து மேம்படுத்தப்பட வேண்டும்.

(ஈ) மேலும், மாநகராட்சி ஏற்றுக் கொண்ட 8 குளங்களையும் பொதுப்பணித்துறை வசம், குத்தகை காலம் முடிவடைந்தபின் ஒப்படைக்க உறுதியளிக்கிறது.

3. மேற்காணும் தீர்மானங்கள் குறித்து கூடுதல் விபரங்கள் கோரப்பட்டதன் பேரில் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் மாநகர பகுதியில் உள்ள 8 (எட்டு) நீர்நிலைகளில் குமாரசாமி / முத்தண்ணன் குளம் பகுதியில் உள்ள குடியிருப்புகளை மட்டும் அகற்றாமல் நீர்நிலையினை மேம்படுத்துவது நடைமுறையில் இயலாத காரியம் என்றும், மேலும் உச்சநீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்புரைகளின்படி நீர்நிலைகளில் உள்ள குடியிருப்புகளை முழுமையாக அகற்றப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

4. மாநகர பகுதியில் உள்ள 8 (எட்டு) நீர்நிலைகளில் மீன்வளர்ப்பு மற்றும் மீன்பிடிப்பு பணிகள் பொதுப்பணித்துறையினரால் ஏற்கெனவே குத்தகைதாரருக்கு வழங்கப்பட்டிருப்பின் மாநகராட்சிக்கு நீர்நிலைகளை ஒப்படைத்த பின்னர், மேற்படி நீர்நிலைகளில் குத்தகை காலம் முடியும்வரை குத்தகைதாரருக்கு எவ்வித பாதிப்பும் இன்றி அனுபவித்துக் கொள்ள குத்தகை காலம் வரை அனுமதிக்கப்படுமெனவும், நீர்நிலைகளை மேம்படுத்தும் பணிக்கு அனுமதிக்கப்பட்ட குத்தகை காலம் இடையூறாக இருப்பின் குத்தகை காலத்தில் குத்தகைதாரர் விகிதாச்சார அடிப்படையில் பயனடைந்தது போகவும் குத்தகைதாரரால் கூடுதல் தொகை செலுத்தப்பட்டு இருப்பின் மீதமுள்ள குத்தகை தொகையினை திருப்பி தரப்பட நடவடிக்கை பொதுப்பணித்துறை / மாநகராட்சி மூலம் மேற்கொள்ளப்படும் எனவும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

5. மேற்குறித்த சூழ்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் இருந்துவரும் 8 நீர்நிலைகளை நீண்டகால குத்தகை அடிப்படையில் மாநகராட்சி வசம் ஒப்படைத்து ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நீர்நிலைகளைப் புனரமைத்து மழைநீர் சேகரித்தல் பணியினை மாநகராட்சி மேற்கொள்ள உரிய ஆணை பிறப்பிக்கக் கோரும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளரின் கருத்துருவை பரிந்துரைத்து அரசுக்கு அனுப்பியுள்ளார்.

6. அரசு, நகராட்சி நிர்வாக இயக்குநரால் பரிந்துரைக்கப்பட்ட மேற்கண்ட கருத்துருவை ஆய்வு செய்தபின் கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் இருந்துவரும் கீழ்க்காணும் 8 நீர்நிலைகளை நீண்டகால குத்தகை அடிப்படையில் ஒரு வருடத்திற்கு ஒரு குளத்திற்கு ரூ.100/– வீதம் 90

வருட காலத்திற்கு கோவை மாநகராட்சி வசம் ஒப்படைத்து ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்படி நீர்நிலைகளைப் புனரமைத்து மழை நீர்

சேகரித்தல் பணியினை மாநகராட்சி மேற்கொள்ள வேண்டும் என தீர்மானித்து அவ்வாறே ஆணையிடுகிறது.

1. கிருஷ்ணம்பதி குளம்
2. செல்வம்பதி குளம்
3. குமாரசாமி / முத்தண்ணன் குளம்
4. கோயம்புத்தூர் பெரிய குளம்
5. நரசம்பதி குளம்
6. செல்வ சிந்தாமணி குளம்
7. வாளாங்குளம்
8. சிங்காநல்லூர் குளம்

7. இவ்வாணை பொதுப்பணித்துறை இசைவினை அ.சா.கு. எண்.30 /மு.செ./ பொதுப்பணித்துறை / நாள் 16.12.2009–ன்படி பெற்று வெளியிடப்படுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –5.
ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலரின் தனிச்செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
மாநில கணக்காயர், சென்னை–18/35 (பெயரில்)
இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, சென்னை –108.
தலைமைப் பொறியாளர், நீராதார அமைப்பு, பொள்ளாச்சி மண்டலம்,
கோயம்புத்தூர்.
முதன்மை தலைமைப் பொறியாளர், நீராதார அமைப்பு, சென்னை–5.
நகல்:
பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின்
தனிச் செயலர், சென்னை –9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.II) துறை, சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி /நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

**(சு.சந்திரமணி)**
அரசு சார்புச் செயலாளர்